Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

நகர் ஊரமைப்புத் துறை

மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை :திரு.ந.ரா.தியாகராஜன், பி.டெக்.,

ந.க.எண். 2143/2020 ஈ.மா-3 நாள் : 22.06.2021

பொருள் : மனைப்பிரிவு - நகர் ஊரமைப்புத் துறை – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - ஈரோடு மாவட்டம் - கொடுமுடி வட்டம் - கிளாம்பாடி பேரூராட்சி மற்றும் புஞ்சை கிளாம்பாடி கிராமம் - ரி.ச.எண்.335/2பி, 2சி2, 2சி3ஏ–ல் 0.98.59 ஹெக்டர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான – தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர், திரு.K.E.பிரகாஷ், ஈரோடு அவர்களின் விண்ணப்பம் பெறப்பட்ட நாள். 03.11.2020 (இணையதள விண்ணப்பம் எண். 202000401017796 நாள்.29.09.2020)
2. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019.
3. வேளாண்மை இணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்கள் கடிதம் எண்.அ4/4004/2020(85), நாள்.31.10.2020
4. இவ்வலுவலக கேட்பு கடிதம் எண்.07.05.2021
5. மனுதாரர் கட்டணம் செலுத்திய நாள். 08.06.2021
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.28.09.2017.
8. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள்.04.05.2017.

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், கிளாம்பாடி பேரூராட்சி மற்றும் புஞ்சை கிளாம்பாடி கிராமம், ரி.ச.எண்.335/2பி, 2சி2, 2சி3ஏ–ல் 0.98.59 ஹெக்டர் புன்செய் நிலத்தினை விவசாயமற்ற அபிவிருத்தியாக குடியிருப்பு மனைப்பிரிவாக மாற்ற பார்வை 3-ல் கண்ட அறிக்கையில் விவசாயமல்லாத உபயோகத்திற்கு மாற்ற தடையின்மைச் சான்று பெறப்பட்டதனைத் தொடர்ந்து அவ்விடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்றும் கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் தொழில் நுட்ப முன் இசைவு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 47 A(2)-ன் படி அளிக்கப்படுகிறது.

பார்வை 2-ல் கண்ட அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019-ன்படி நில உரிமை குறித்து உள்ளாட்சி நிர்வாகமே பொறுப்பானதாகும் மற்றும் நிர்வாக அதிகாரியால் (EXECUTIVE AUTHORITY) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றின்பேரில் இத்தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/(ஈ.மா)எண்.133/2021 என எண்ணிடப்பட்டு இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 விதி எண்.41(4)-ன்படி, பூங்காவிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது ஒதுக்கீடு (10%) 605.00ச.மீ-க்கு அரசு வழிகாட்டி மதிப்பு தொகை ரூ.42,500/- மனுதாரரால் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன் பொது ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் மனுதாரரால் தானப் பத்திரம் மூலம் செயல் அலுவலர், கிளாம்பாடி பேரூராட்சி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை எண் 19(இ) 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டும்.

புன்செய் விவசாய பகுதியிலிருந்து விவசாயமல்லாத குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்திக்கு மாற்ற நிலஉபயோக மாற்ற பயன்பாட்டிற்கு அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017-ன் விதி-3ன்படி ரூ.1000/- பரிசீலனைக் கட்டணம், உள்ளாட்சியில் பெற்றும் விதி-9ன்படி 3% மனைப்பிரிவு மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் (market value)ல் கீழ்கண்ட அரசுக் கணக்குத் தலைப்பில் மனைப்பிரிவு விண்ணப்பதாரரிடமிருந்து பெற்று உள்ளாட்சியால் செலுத்தப்படவேண்டும். செலுத்திய விவரம் இவ்வலுவலகத்திற்கும் தெரிவிக்கப்படவேண்டும்.

<u>கணக்குத் தலைப்பு</u>

0217 Urban Development
60 Other Urban Development schemes
800 Other Receipts.
AS Receipts under Land use conversion charges
27 Non Taxation fees – 09 collections
(DPC: 0217-60-800-AS-2790)

அவ்வாறு நிலப்பயன்மாற்றத்தொகை அரசுக்கு செலுத்திய பின்னரே நிலப்பயன்மாற்றமும் தொழில்நுட்ப முன் இசைவும் அமுலுக்கு வரும், அதன்பின்பே உள்ளாட்சி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி உள்ளாட்சி மன்றத் தீர்மானம் மற்றும் அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இக்கடிதம் மனைப்பிரிவு நிபந்தனைப்படிவம், மனைப்பிரிவு வரைபட நகல் பெற்றுக்கொண்டமைக்கு மறுதபாலில் ஒப்புகைச்சான்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

)58

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>:

1. பார்வை 6-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கையின்படி "உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் "

2. பார்வை 7-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112,Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the TamilNadu Real Estate (Regulation & Development) Act 2016.The promotor has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be,in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority "

22/06/21

நகர் ஊரமைப்புதுணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

22/6/2021

<u>இணைப்பு</u> :
அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
<u>ம.வ/(ஈமா)எண்: **133/2021**</u> மற்றும்
மனைப்பிரிவு நிபந்தனைகள் } 2 நகல்கள்

<u>பெறுநர்</u> :
செயல் அலுவலர்,
கிளாம்பாடி பேரூராட்சி,
கொடுமுடி வட்டம்,
ஈரோடு மாவட்டம்

<u>நகல் - மனுதாரர்</u>
1. திரு.K.E.பிரகாஷ்,
S/o.ஈஸ்வரமூர்த்தி,
62, காகம், கன்னியம்பாளையம்,
மொடக்குறிச்சி வட்டம்,
ஈரோடு - 638 109.

2.Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),
No.1A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road
Egmore,
Chennai 600 008.

ஈரோடு மாவட்டம், கிளாம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர்: – திரு.ந.பழனியப்பன்

ந.க.எண். 309/2020 நாள். 29.06.2021

பொருள்: மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் – பேரூராட்சிகள் நிர்வாகம் – ஈரோடு மாவட்டம் – கிளாம்பாடி பேரூராட்சி – வார்டு எண்.15 குமாரசாமிகவுண்டம்பாளையம் புஞ்சைகிளாம்பாடி “அ” கிராமம் ரீ.ச.எண்.335/2B, 335/2C2, 335/2C3A –ல் பரப்பு 0.98.59 ஹெக்டேர் பரப்பளவு குடியிருப்பு மனைப்பிரிவை வரன்முறைப்படுத்தி உத்திரவிடல் – தொடர்பாக.

பார்வை :
1.அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை(UD4(3) நாள்.04.05.2017.
2.அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை(UD4(3) நாள்.13.10.2017.
3.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை –2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/எல்ஏ2 நாள்.30.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4.மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) ஈரோடு மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.2143/2020/ஈமா.3, நாள்.22.06.2021
5.கிளாம்பாடி பேரூராட்சி தனிஅலுவலரின் முன்அனுமதி நாள்.28.06.2021
6.மனுதாரர் விண்ணப்பம் நாள்.23.06.2021
7.தொடர்புடைய ஆவணங்கள்.

* * * * *

உத்திரவு:

பார்வை –1 மற்றும் 2ல் காணும் அரசு ஆணைகளில் தெரிவித்துள்ள விபரப்படிக்கும், பார்வை–3ல் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி பார்வை–4ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) ஈரோடு மாவட்டம் அவர்களின் உத்திரவில் ஈரோடு மாவட்டம், கிளாம்பாடி பேரூராட்சி வார்டு எண்.15 குமாரசாமிகவுண்டம்பாளையம் புஞ்சைகிளாம்பாடி “அ” கிராமம் ரீ.ச.எண்.335/2B, 335/2C2,335/2C3A–ல் பரப்பு 0.98.59 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ந.க.எண்.2143/2020/ஈ.மா3 நாள்.22.06.2021 இன் படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 5–இல் காணும் .கிளாம்பாடி பேரூராட்சி தனிஅலுவலரின் முன்அனுமதி நாள்.28.06.2021 –ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 4–இல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மனுதாரர் மனைபிரிவுற்கான தெருவிளக்கு வசதி செய்தல், தார்சாலை அமைத்தல், குடிநீர் வசதி, வடிகால்வசதி

ஆகியவற்றினை நல்லமுறையில் மேற்கொண்டுள்ளார் என இளநிலை பொறியாளர் வெங்கம்பூர் தொகுப்பு அவர்களால் சான்று வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சாலைகள் மற்றும் மூலை முடக்கு ஆகியவற்றை நன்கொடை ஆவணம் (GIFT DEED) மூலம் பேரூராட்சிக்கு பத்திர பதிவு செய்து கொடுத்து இது கொடுமுடி சார்பதிவாளர் அலுவலக ஆவணம் 393/2021, நாள்.19.02.2021–இல் பதிவும் செய்யப்பட்ட பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் சர்வே எண்ணில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுகளில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைபிரிவு ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனைப்பிரிவு இடத்தில் கட்டிடங்கள் கட்டும் போது ஏற்கனவே உள்ள விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு கட்டப்பட வேண்டும்.
2. கட்டணங்கள் செலுத்தப்பட்டதில் தணிக்கையில் ஏதாவது குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டால், அதை தங்கள் பொறுப்பில் சரிசெய்து கொடுக்கப்பட வேண்டும்.
3. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு / வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் (23அடி) அகல சாலைக்கு 1.5 மீட்டரும் (5'அடியும்) 9 மீட்டர் (30அடி) அகலம் மற்றும் 12 மீட்டருக்கு (40 அடிக்கு) அகலம் வரையிலான சாலைகளுக்கு 3 மீட்டரும் (10அடியும்), 18 மீட்டர் (60அடி) சாலைக்கு 4.5 மீட்டரும் (15 அடியும்), 24 மீட்டர் (80அடி) அகலமும் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். பேரூராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப் பகுதியில் தெருவின் உயர்மட்டத்திலிருந்து 1.8 மீ (6அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி 2.4 மீ (8அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவி[illegible] வேறு எந்தவித கட்டிடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.
5. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுள்ள திறந்வெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.
6. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்கத்திறந்தவெளியில் கிணறு, கழிப்பாறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், உந்து வண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற

குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச்சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும், மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து **3.00** மீட்டர் / **3.75** மீட்டர் உயரித்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7. மனைபிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து உரிய அனுமதி பெறபடவேண்டும்.

8. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

9. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

10. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் மனுதாரருக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

11. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல், மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

12. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக தொடர்புடைய நிர்வாக அதிகாரியிடமும், உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவ்வரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

13. மனுதாரர் செயல்அலுவலர், மற்றும் நிர்வாக அதிகாரி, உள்ளாட்சி அமைப்புகளிடம் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

14. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

15. பின்வரும் காலங்களில் இம்மனைப்பிரிவின் சம்மந்தமாக நீதிமன்ற வழக்கு அல்லது ஏனைய வில்லங்கள் ஏதேனும் உண்டாகும் பட்சத்தில் மனுதாரருக்கு மறு அறிவிப்பு அல்லது தகவல் ஏதுமின்றி இவ்வாணையை ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனைகளுடன் ஆணைப்படுகிறது,

16. நடைமுறையில் உள்ள இதர விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இம்மனை பிரிவிற்க்கு ஒப்புதல் வழங்க தாங்கள் செலுத்தியுள்ள தொகை தணிக்கையில் குறைவு என தெரியவரும்போது மீதத்தொகையை உடன் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்படுகிறது.

தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு ம.வ/ஈ.மா எண்.133/2021 விபரம்

பரப்பளவு

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	:	0.98.59 ஹெக்டேர்
கோரிய மனைகள்	:	41
ஒதுக்கீடு மனைகள்	:	41
மனைப்பிரிவு சாலையின் பரப்பு	:	3868.00 ச.மீ

(10% பூங்கா பரப்பிற்கான இட ஒதுக்கீட்டுக்கான தொகை ரூ.12500/– இணையதள சலான் மூலம் 08.06.2021 அன்று செலுத்தப்பட்டுள்ளது. சலான் இணைக்கப்பட்டுள்ளது.

பொது உபயோகம்	:	47.60 ச.மீ = (0.79%)
மின்வாரிய உபயோகம்	:	48.30 ச.மீ = (0.80%)

கிளாம்பாடி பேரூராட்சி அலுவலகம் ★ ஈரோடு மாவட்டம் ★

29/06/2021

செயல் அலுவலர்,
கிளாம்பாடி பேரூராட்சி,
29/6/2021 ஈரோடு மாவட்டம்.

இணைப்பு
வரைபடம் - 1.

பெறுதல்
திரு.கே.ஈ.பிரகாஷ் த/பெ.ஈஸ்வரமூர்த்தி
62, காணியம்பாளையம், காகம் அஞ்சல்,
சிவகிரி (வழி).

நகல்

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்கள், நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அலுவலகம், ஈரோடு மாவட்டம் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சார்பதிவாளர், கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகம், கொடுமுடி, ஈரோடு – 638151.
3. உதவி இயக்குநர் (நில அளவை), ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு.
4. தனி வட்டாட்சியர், நகர நில அளவை



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate